**சுருக்கம்**

பொதுப்பணிகள் – நில அளவைப் பதிவேடுகள் துறை – இராமநாதபுரம் மாவட்டம் – திருமதி.V.நாகஜோதி, க/பெ. காலஞ்சென்ற திரு.போ.கருப்புத்துரை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பணிகள் அலகு, பணி–9(2) பிரிவு**

அரசாணை (3டி) எண்.90 நாள் 30.05.2023.
சோபகிருது வருடம், வைகாசி–16,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரின் கடித எண். ந.க.ர1/27589/2022, நாள் 26.10.2022.

******

**ஆணை:–**

இராமநாதபுரம் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில் குறுவட்ட அளவராகப் பணியாற்றி பணியிடையே 07.12.2020 அன்று காலமான திரு.போ.கருப்புத்துரை என்பவரின் மனைவி திருமதி.V.நாகஜோதி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில், பணிநியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் விண்ணப்பம் அளித்திருந்தார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், இராமநாதபுரம் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 06.04.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திருமதி.V.நாகஜோதி என்பவரை இராமநாதபுரம் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில், கருணை அடிப்படையில் 06.04.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டி இராமநாதபுரம் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

//த.பி.பா//

உதவி இயக்குநர்
மாவட்ட நில அளவை அலுவலகம்
இராமநாதபுரம்

2. இராமநாதபுரம் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநரின் முன்மொழிவினை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

3. நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரின் பரிந்துரையை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர், இராமநாதபுரம் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.V.நாகஜோதி என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 06.04.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.2967/க்யூ2/2023-1, நாள் 25.04.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4602608/ஜி2/2023-1, நாள் 16.05.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்**

நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை-5.
உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை,
இராமநாதபுரம் மாவட்டம்.
திருமதி.V.நாகஜோதி, இளநிலை உதவியாளர்
(இராமநாதபுரம் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை
உதவி இயக்குநர் மூலமாக)

**நகல்**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

20.6.23
உதவி இயக்குநர்
மாவட்ட நில அளவை அலுவலகம்
இராமநாதபுரம்

20/5/2023
பிரிவு அலுவலர்.

30.5.23